# புதிய சட்டத்தால் தமிழரை அழிக்கத்திட்டம் தடுக்குமாறு ராஜீவிடம் கூட்டணி கோரிக்கை

Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

ஈழமுரசு

முரசு 2 18-1-86 சனி (தை 5 ஐ. அவ். 7) முழக்கம் 843

இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஆயுதப் படையினருக்கு பாரிய ஆயுதங்களைப் பாவிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதால் இப் பகுதியிலுள்ள அனைத்துத் தமிழர்களினதும் உயிருக்கும் உடைமைகளுக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக தமிழர் விடுதலைக் கூட்டணி இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு அனுப்பி வைத்துள்ள தந்தி ஒன்றில் அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இராணுவ முகாம்களைச் சுற்றியுள்ள ஒரு கிலோ மீட்டர் எல்லைப்பகுதி பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதால், அப்பாவித்தமிழர்கள் இனப்படுகொலைக்குள்ளாவார்கள் எனவும், எனவே இதனைத் தடுக்க இந்தியப் பிரதமர் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் கூட்டணி இத் தந்தி மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சனத்தொகை கூடிய பகுதிகளில் அறுபது ஆயுதப்படையினரின் முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் இத் தந்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் கொல்லப்படலாம், வீடுகள் நாசமாக்கப்படலாம் எனவும் இராணுவத்தினர் எச்சரிக்கை விடுத்திருப்பது அப்பாவித் தமிழர்களுக்கு மரணமும், அழிவும் நேரவிருப்பதையே குறிப்பதாகவும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# குரும்பசிட்டி, ஏழாலை பகுதியில் துப்பாக்கி சூட்டுக்கு 4 பேர் பலி!

## வீடுகள் எரிக்கப்பட்டதுடன், உடைத்தும் நொருக்கப்பட்டன; ஒன்பது பேர் காயம்

(ஏழாலை, வயாவிளான் நிருபர்கள்)

பலாலி முகாமிலிருந்து கனரக வண்டிகள் சகிதம் நடைபவனியாக ஏழாலை, குரும்பசிட்டி பகுதிகள் ஊடாக நேற்றுக் காலை ரோந்து சென்ற சிருடையினர் அப்பகுதியில் நடத்திய துப்பாக்கி வேட்டைகளினால் நான்கு பேர் பலியானதாகவும், ஒன்பது பேர் காயமடைந்ததாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. பல வீடுகள் தீ மூட்டி எரிக்கப்பட்டன. வேறு பல வீடுகள் உடைத்து நொருக்கப்பட்டு சேதப்படுத்தப்பட்டன. பல வளவுகளின் வேலிகளும், மதில்களும் தகர்க்கப்பட்டுள்ளன.

இச்சம்பவங்களின் போது ஆகாயத்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட சூடுகளினால் வீதிகள், தோட்டங்களில் கிடங்குகள் ஏற்பட்டுள்ளன.

ஏழாலையைச் சேர்ந்த குத்தகை என அழைக்கப்படும்கதிர்காமு கந்தவனம் (75), குரும்பசிட்டியைச் சேர்ந்தவர்களான துரைராசா சிவம் (26), குட்டித்தம்பி இரத்தினம் (50), ஓய்வுபெற்ற விவசாய இலாகா லிகிதரான வைத்திலிங்கம் குமாரவேலு (68) ஆகியோரே கொலையுண்டவர்களாவர்.

காயமடைந்தவர்களில் கொழும்பைச் சேர்ந்த நிஸார் (20) ஏழாலையைச் சேர்ந்த ரமேஷ் (17), சுப்பையா (40) உரும்பராயைச் சேர்ந்த சுதர்ஸன் (18) ஆகியோர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அவசர சத்திர சிகிச்சைக்குட்படுத்தப் பட்டனர்.

சிருடையினர் ரோந்தின் போது போராளிகள் மேற்

...6ம் பக்கம் பார்க்க

## வடக்கே வருகின்றன

(வவுனியா)

நேற்றைய தினம் வடக்கு நோக்கிச் சுமார் முப்பத்தைந்து

...6 ம் பக்கம் பார்க்க

## பொரளை குண்டுவெடிப்புக்கு தமிழீழ அதிரடிபடை உரிமை

பொரளையில் நேற்று முன் தினம் இடம்பெற்ற குண்டு வெடிப்புக்கு தாமே பொறுப்பாளிகள் என்று தமிழீழ அதிரடிபடை உரிமைகோரியுள்ளது.

இக்குண்டு வெடிப்பினால் இரண்டு பொலிஸ் அதிகாரிகள் படுகாயமடைந்ததாகவும், ஒருவர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டதாகவும் அரசாங்கத்தினுடைய இக்கட்டடத்திற்கு லஇலட்சம் ரூபா சேதமேற்பட்டதாகவும் அதிரடிப்படை அறிவித்துள்ளது.

இக் குண்டை வேறோர் இடத்தில் வைப்பதற்காகவே தமது தோழர்கள் கொண்டு சென்றதாகவும், இரவுக் காவலிலீடுபட்டிருந்த பொலிஸார் அவர்களைப் பிடிக்க முற்பட்ட போது, மேற்படி கட்டடத்திற்குக் கீழ் குண்டை வைத்து விட்டு தமது தோழர்கள் தலைமறைவாகிவிட்டதாகவும் அதிரடிப்படையின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கோட்டைக்குள் நடந்த யாழ். அதிகாரிகள் மாநாடு

பாதுகாப்பு வலயச் சட்டத்தால யாழ் நகரில் உருவாகியுள்ள புதிய அச்ச நிலையை யாழ்ப்பாணத்தின் முக்கிய அரச அதிகாரிகள், கோட்டை இராணுவ அதிகாரிகளை நேற்று மாலை நேரில் சந்தித்து எடுத்துக் கூறினர்.

யாழ். மாவட்ட ராணுவ இணைப்பதிகாரி திரு. எச். ரூபசிங்காவுடன் இடம்பெற்ற இச் சந்திப்பில் அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம், உதவி அரசாங்க அதிபர் திரு. ரி. குலசேகரம், வைத்தியசாலை

...6 ம் பக்கம் பார்க்க

## இளம் குடும்பப் பெண்ணின் கண்ணீர்க் கதை

## 'தன்னிடமிருந்த பிள்ளையை என்னிடம்தந்த கணவர், என்முன்னாலேயே சுட்டுக்கொலை!'

(வயாவிளான்)

குரும்பசிட்டியில் நேற்று இடம்பெற்ற சூட்டுச் சம்பவத்தில் துரைராசா சிவகுமார் (26) என்ற இளம் குடும்பஸ்தர் ஸ்தலத்திலேயே மரணமானார்.

தன் கண் முன்னாலேயே தனது கணவன் கொல்லப்பட்டது பற்றி அவரின் மனைவி தெரிவித்த விபரங்கள் கல் நெஞ்சையும் கரையவைக்கும். அவர் தெரிவித்ததாவது:-

'காலையில் வீதி வழியாகவும்

...6ம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதிக்கு அவசர கடிதம்

## ஆயிரம் மீட்டர் பிரகடனம் மக்கள் விரோதச் செயல்

கோட்டை இராணுவமுகாமிலிருந்து ஆயிரம் மீட்டர் சுற்றளவை பாதுகாப்பு வலயமாக்கியுள்ளது மக்கள் விரோத நடவடிக்கையாகும். இதனால் பல்லாயிரக்கணக்கான மக்கள் நெருக்கமாக வாழும் யாழ்நக

—6ஆம் பக்கம் பார்க்க

## உருத்திரபுரத்தில் சுடப்பட்டு மூவர் பலி; எண்பது பேர் கைது!

(கிளிநொச்சி நிருபர் எம். விவேகானந்தன்)

நேற்று முன் தினம் உருத்திரபுரம் எட்டாம் வாய்க்கால் பகுதிகளை இராணுவம் சுற்றி வளைத்து துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் மூவர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். பலர் கைது செய்யப் பட்டனர். சிலரைக் காணவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஹெலிகப்டர், ட்ரக்குகள், கவசவாகனங்கள், லொறிகள் மூலம் உருத்திரபுரம், திருநகர், கனகபுரம் வீதிகள் வழியாக மூன்று பிரிவாக உருத்திரபுரம் எட்டாம் வாய்க்கால் பகுதிகளுக்குச் சென்ற இராணுவத்தினர், இப்பகுதியில் பரவலாக மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் மூன்று இளைஞர்

...6 ம் பக்கம் பார்க்க

## மாலை ரோந்து

(வண்ணார்பண்ணை)

நேற்று மாலை கோட்டையிலிருந்து நீதிமன்றப் பக்கமாக

—6-ஆம் பக்கம் பார்க்க

## அச்சத்துடன் யாழ்நகரில் மக்கள் நேற்று நடமாடினர்

நேற்று முன் தினம் யாழ்நகரில் இடம்பெற்ற அசம்பாவிதங்களையடுத்து நேற்று மக்கள் நடமாட்டம் சிறிது காணப்பட்ட போதிலும் நகரில் அசாதாரண அமைதி நிலவியதை அவதானிக்க முடிந்தது.

ராணுவ முகாமையடுத்

...6ஆம் பக்கம் பார்க்க

## யாழ். ஆஸ்பத்திரி ஊழியர் வேலை செய்வதற்கு அச்சம்

அரசின் புதிய பாதுகாப்பு பிரதேச சட்டத்தினால் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிஊழியர்கள் அங்கு வேலை செய்ய அச்சம் தெரிவித்திருப்பதாக யாழ். பெரியாஸ்பத்திரி உயர் அதிகாரிகள் மேலிடத்துடன் தொடர்புகொண்டுள்ளனர்.

இது தொடர்பாக இங்குள்ள உயரதிகாரி ஒருவர் நேற்று பேதனை வைத்தியசாலைகள் திணைக்கள இயக்குனர், சுகாதார திணைக்கள இயக்குனர் ஆகியோருடன் தொடர்பு கொண்டார். இந்த ஊழியர்

— 6ஆம் பக்கம் பார்க்

தமிழ்பகுதிகளில் கூடுதலாக விற்பனையாவது ஈழமுரசு

## வரி விளம்பரம்

### பெண் ரெயிலர்கள் தேவை

குழந்தைகள், மகளிர் ஆடைகள் அனைத்தும் தைக்கக்கூடிய பெண் ரெயிலர்கள் தேவை. உடன் நேரில் வரவும். முன்னனுபவம் உள்ளவர்களுக்கு முதலிடம் திறமைக்கேற்ற சம்பளம் வழங்கப்படும். கிளீன் கட், 239, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். B/1016


## மீண்டும் அதே தொல்லை

(வேலணை)

வேலணை கிழக்கு வேலணை மேற்கு ஆகிய பகுதிகளில் கட்டாக்காலி, ஆடு மாடுகளின் தொல்லை மீண்டும் அதிகரித்துள்ளது. இவைகள் இரவிலும் பகலிலும் இப்பகுதி விவசாய நிலங்களுக்குள் புகுந்து சேதங்களை ஏற்படுத்தி வருகின்றன.

சென்றமாதம் இக்கட்டாக்காலி ஆடு, மாடுகளை, கட்டுப்படுத்துமபடி விடுதலை இயக்கமொன்று ஒலிபெருக்கி மூலம் அறிவித்திருந்தது. இதன் காரணமாக கட்டாக்காலிகள் ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டிருந்தன. ஆனல் அவை மீண்டும் பழைய பல்லவியாய் இருக்கின்றது.

இக்கட்டாக்காலிகளை கட்டுப்படுத்த விடுதலை இயக்கங்கள் மீண்டும் முன்வர வேண்டுமென மேற்படி பகுதி விவசாயிகள் கருத்து தெரிவிக்கின்றனர்கள்.

யாழ்நகரின்

# போக்குவரத்து ஒழுங்கு மாணவரிடம் ஒப்படைப்பு

யாழ்நகரில் போக்குவரத்துச் சேவைகளை ஒழுங்குபடுத்துவதற்கு இன்றைய நிலையில் பொலிஸார் செயற்படாத காரணத்தால் பாடசாலை மாணவர்களின் உதவியை யாழ். மாநகர சபை ஆணையாளர் நாடியுள்ளார்.

இது சம்பந்தமாக நகரிலுள்ள ஏழு பிரதான பாடசாலைகளின் அதிபர்களுக்கு ஆணையாளர் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் இப் பிரச்சினையை மாநகராட்சிமன்றம் தனித்துக் கையாள முடியாது என்று தாம் கருதுவதால் கல்லூரி மாணவர்கள் மூலம் தொண்டு அடிப்படையிலும், சுற்று முறையிலும் போக்குவரத்துக்களை ஒழுங்குபடுத்த முடியுமென தான் கருதுவதாகத் தெரிவித்துள்ளார்.

தினசரி காலை, நண்பகல், மாலை ஆகிய போக்குவரத்து அதிகமாகவுள்ள நேரங்களில் முப்பது மாணவர்களாவது இக்கடமையில் ஈடுபடவேண்டியிருக்கும் எனவும், இதற்காக மாணவர்களுடன் கலந்தாலோசித்து முப்பதிற்குக் குறையாத மாணவர்களின் பட்டியலொன்றை அனுப்புமாறும் ஆணையாளர் அதிபர்களிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதில் பங்குபற்றுவதன் மூலம் சமுதாயத்தின் தேவைக்கேற்ப சேவையாற்றக்கூடிய வாய்ப்பும், நகரத்தின் குறைபாடுகள் சிலவற்றையாவது நெறிப்படுத்துகின்ற வாய்ப்பும் மாணவர்களுக்குக் கிடைக்குமென ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

யாழ். மத்திய கல்லூரி, கனகரத்தினம் மகா வித்தியாலயம், பரி.யோவான் கல்லூரி, சம்பத்திரிசியார் கல்லூரி, ஒஸ்மானியாக் கல்லூரி, வைத்தீஸ்வரா வித்தியாலயம், யாழ். இந்துக் கல்லூரி ஆகியவற்றின் அதிபர்களுக்கே இக்கடிதம் அனுப்பப்பட்டது.

## சமாதான சபை

(அரியாலை)

அரியாலையில் அண்மையில் தெரிவு செய்யப்பட்ட கலைமகள் வட்டாரச் சமாதானசபை விஸ்தரிக்கப்படவுள்ளது. இச்சபையின் முதலாவது கூட்டம் ஸ்ரீ கலைமகள் சன சமூகநிலைய மண்டபத்தில் நடைபெற்றபோது இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.


## விற்பனைக்கு

எமது பண்ணையில் உள்ள நல்லின பசுக்கள் (3), பசுக்கன்றுகள் (7) நாம்பன் கன்றுகள் (2) விற்பனைக்கு உண்டு. மேலதிக விபரங்களுக்கு 25.1.1986ம் திகதிக்கு முன்பு பொது முகாமையாளர், யாழ் மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய் என்ற முகவரிக்குத் தொடர்பு கொள்ளவும்.

B/1017



## இரண்டாவது பிறந்ததினவாழ்த்து

### பா. உஷாந்தி



14-01-1986

யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதியைச் சேர்ந்த பாலச்சந்திரன்(சந்திரன்) மாநகாசபை யாழ்ப்பாணம், ஜெயதீஸ்வரி யாழ் அரசினர் திருக்குடும்ப கன்னியர் ஆங்கிலப் பாடசாலை தம்பதிகளின் செல்வப் புதல்வி பா. உஷாந்தி தனது இரண்டாவது பிறந்த தினத்தை சிறப்பாக பொங்கல் திருநாளில் கொண்டாடினர்கள். இவர் சகல செல்வங்களும் பெற்று சிறப்புடன் என்றென்றும் வாழ நாங்களும், எல்லாம் வல்ல விநாயகப் பெருமானை வேண்டி வாழ்த்துகின்றோம்.

பொ. கமலநாதன், சித்தப்பா (பிரான்ஸ்)
பிறையா கமலநாதன் சித்தி (பிரான்ஸ்)
ரதன் அண்ணா (நோர்வே)

R/16063


# புதிய அதிபர்களை நியமிக்க விபரங்கள் சேகரிப்பு!

(யாழ்ப்பாணம்)

புதிய அதிபர்களை சேவையில் சேர்த்துக்கொள்ளல் தொடர்பாகக் கல்வியமைச்சு சுற்று நிருபம் ஒன்றினை வெளியிட்டுள்ளது.

இதனையடுத்து வடமாநிலக் கல்விப்பணிப்பாளர் திரு.எம். சிமிடாம்பிள்ளை இதுதொடர்பான அறிவிப்பினை நேற்று விடுத்தார்

புதிய அதிபர்களைச் சேவையில் சேர்த்துக்கொள்ளல் தொடர்பாக பின்வரும் பதவிகள் வகிப்போரிடமிருந்து விபரங்கள் கல்வியமைச்சினால் கோரப்பட்டுள்ளன.

இது தொடர்பாக அனுப்பப்பட்ட படிவங்களை (இப்படிவங்கள் ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளன) இரட்டைப் பிரதிகளில் பூரணப்படுத்தி வட்டாரக் கல்வியதிகாரி ஊடாக இம்மாதம் 24ம் திகதிக்கு முன்பாக தனது முகவரிக்கு அனுப்பி வைக்கவேண்டுமென பணிப்பாளர் வேண்டியுள்ளார்.

இதில் நான்கு அம்சங்கள் அடங்குகின்றன. (1), 2ம் 3ம் தர விசேட பதவிவகிப்போர், (2) 3ம 4ம் 5மதர அதிபர் பதவிவகிப்போர், (3) மேற்படிச் சேவையிலிருந்து 1-1-85 அன்றோ அதற்குப் பின்னரோ இளைப்பாறியவர்கள், (4) மேற்படித் தகைமைகளுடன் கல்வியமைச்சில் வேறு பிரிவுகளில் கடமையாற்றும உத்தியோகத்தர்கள்.

## தாக்குதலால் கூரைகள் சேதம்

நேற்று முன்தினம் கோட்டைக்குள்ளிருந்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களினல் வைத்தீஸ்வர வித்தியாலயத்தின் கூரைப்பகுதி பலத்த சேதமடைந்தது.

பிளையார் ஸ்டோர்ஸின் மேற்பகுதியின் பல அஸ்பெஸ்டஸ் தகடுகளும் முற்றாக சேதமடைந்துள்ளன.

## அடிக்கடி இங்கு மின் வெட்டு

யாழ்நகரில் 5ம், 3ம், 4ம் வட்டாரங்களில் அடிக்கடி ஏற்படும் மின் தடையைப் போக்க நடவடிக்கை எடுக்கும்படி கோரிக்கை விடுக்கப்பட்டுளளது.

இது சம்பந்தமாக யாழ். மக்கள் முன்னேற்றச் சங்கம் யாழ். மாநகரமின் பொறியியலாளருக்கு அனுப்பி வைத்துள்ள மகஜர் ஒன்றில் இப்பகுதிகளில் தற்பொழுது சட்டவிரோத மின் இணைப்பை எவரும் செய்யாது ஏனைய மக்கள் கண்காணித்து வருகின்றபோதிலும் மின் தடைகள் அடிக்கடி இங்கு ஏற்பட்டு வருவது கவலைக்குரியதாகும் எனக் குறிப்பிடப்பட்டுளளது.

## கவலை

(ஒட்டுசுட்டான்)

முத்தையன்கட்டு, கற்சிலைமடு, புளியங்குளம், ஒட்டுசுட்டான் பகுதியல் உள்ள காட்டு மிருகங்களால் அழிக்கப்பட்டு எஞ்சியிருக்கும் நெல் வயல்கள் அறுவடைக்கு ஆயத்தப்படுத்திக்கொண்டு இருக்கும் பொழுது, வெள்ளக்காடாகக் காட்சியளிப்பதாகவும், இதனல் அறுவடையையும் செய்ய முடியாமல் நெற்பயிர்கள் அழிந்துள்ளதாகவும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

## பிறந்தநாள் வாழ்த்து

✻ இணுவில் கிழக்கு செல்வராசா கௌசலாதேவி தம்பதியின் மகன் செந்தூர் இன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்.

✻ கொழும்புத்துறை கிழக்கு கமலநாதன் தனேஸ்வரி தமபதியின் மகள் தாரணி இன்று தனது மூன்றாவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்.

✻ அச்சுவேலி தெற்கு வீரசிங்கம் தில்லைநாயகி தம்பதியின் மகள் சிவதரிசினி இன்று தனது பத்தாவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்.

✻ யாழ்நகர் செபஸ்ரியாம்பிள்ளை பிரான்சிஸ்கா தம்பதியின் மகன் றுபின்கெனடி இன்று தனது பதினொராவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்.

✻ பாஷையூர் மரியதாஸ் கிறிஸ்ரின் தம்பதியின் மகன் காமினி தெய்வேந்திரா இன்று தனது ஒன்பதாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

## குறுகிய தூர பஸ் சேவை

மன்னருக்கும்- முருங்கனுக்கு மிடையேயான குறுகிய தூர பஸ் சேவைகளை ஒழுங்காக நடாத்த நடவடிக்கை எடுக்கும் படி கோரிக்கை விடப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக மன்னர் சாலை அத்தியட்சகருக்கு முருங்கன் உப அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் சிவ. சங்கரப்பிள்ளை அனுப்பிய மகஜரொன்றில் பெருந் தொகையான மக்கள் வாழும் முருங்கன் பகுதிக்கு காலையிலும் மாலையிலும் பஸ் சேவைகளை ஒழுங்காக நடாத்தி மக்களின் பிரயாணக் கஷ்டங்களை நீக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்கப்பட்டுள்ளது.

## பாராட்டு

(சங்கானை)

வட்டுக்கோட்டை மேற்கு சமாதான சபையின் விசாரணைகள் ஒவ்வொரு ஞாயிறுக் கிழமையும் தலைவர் திரு. து. பாக்கியநாதன் (சட்டத்தரணி) தலைமையில், செயலாளர் திரு. ந. இராமச்சந்திராவின் நெறிப்படுத்துகையுடன் மிகவும் கண்ணியமாகவும், சிறப்பாகவும் நடைபெறுவதாக பாராட்டுத் தெரிவிக்கப்படுகிறது.

எழுத்து மூலமான ஆதாரங்களையும், நேரடி வாக்குமூலங்களையும ஆராய்ந்து நல்ல முடிபுகளையும், பல வருடங்களாக தீர்க்கப்படாத பல வழக்குகளை குடியிருப்பாளர்களுக்கும் உரிமையாளர்களுக்கும் இடையில் எழுந்த உரிமைப் பிரச்சினைகளையும் சுமுகமான தீர்வை அளித்து நல்ல மாதிரியாக இயங்கி வருவதாக கிராம சேவை அலுவலர் திரு. கதிர்வேலு சிறிகரன் கருத்தும், மகிழ்ச்சியும், பாராட்டும் தெரிவித்துள்ளார்.

## இளைஞருக்கு துப்பாக்கிச்சூடு

(வண்ணர்பண்ணை)

பருத்தித்துறை ராணுவமுகாமுக்குருக சென்றுகொண்டிருந்த இளைஞர் ஒருவர் ராணுவத்தினரால் சுடப்பட்டார். இதனல இவர் வயிற்றிலும், கையிலும் சூட்டுக்காயங்களுடன் யாழ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவர் இருபது வயது மதிக்கத்தக்க மோகன் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கிணற்றுள் கிடந்த சடலம்

(கல்வியங்காடு)

கல்வியங்காடு விளையாட்டரங்க வீதியில் உள்ள காணியொன்றில் கிடங்குக்குள் சுமார் நாற்பதைந்து வயதுடைய ஒரு ஆணின் சடலம் கிடக்கக் காணப்பட்டது.

கை, கால், முகம், உடம்பு யாவும் வீங்கிய நிலையில் நாக்கு வெளியில் தள்ளியவாறு, அழுகிய நிலையில் கிடந்த இந்த சடலம் 'மொட்டையர்' என அழைக்கப்படும் செல்லத்துரை என்பவரது எனப் பின்னர் அடையாளம் காணப்பட்டது.

## நாவற்குழி அச்சமான பாதை

நேற்று நாவற்குழி முகாமூடான பாதை போக்குவரத்துக்குத் திறந்திருந்த போதிலும் வாகனங்கள் அச்சம் காரணமாக அப்பாதையைப் பாவிக்கவில்லை. கோப்பாய் கைதடி பாதையே நேற்று வாகனப் போக்குவரத்துக்கு பாவிக்கப்பட்டது.

இத்தவேளை நேற்றுக்காலை கிளிநொச்சி, கொடிகாமம் போன்ற இடங்களிலிருந்து வந்த பஸ் வண்டிகளும், தனியார் வாகனங்களும்கைதடிக்கு அப்பால் செல்லாமல் திரும்பிச் சென்றன.

## ஆணையாளருக்கு நன்றியும் கோரிக்கையும்

(நல்லூர்)

யாழ் மாநகராட்சி மன்றப் பகுதிக்குள் மழைகாலத்தில் ஏற்படும் வெள்ளத்தைக்கட்டுப்படுத்த சிறந்த வடிகால்களை அமைப்பதற்கு 1986ம் ஆண்டுக்கான மாநகராட்சி மன்ற வரவு செலவு நிதி ஒதுக்கீட்டில் பெருநிதி ஒதுக்கியமைக்காக யாழ் மாநகராட்சி மன்ற ஆணையாளருக்கு நன்றி தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரியாலை மேற்குப் பகுதியில் காலத்துக்குக்காலம் ஏற்படும் வெள்ளத்தைக் கட்டுப்படுத்த சிறந்த வடிகால்களை அமைப்பதற்கு முன்னுரிமை வழங்கும்படியும் அரியாலை மேற்கு காந்தி சனசமூக நிலையப் பொதுச்செயலாளர் சார்பில் யாழ். மாநகராட்சி மன்ற ஆணையாளர் திரு. சீ. வீ. கே. சிவஞானத்திற்கு கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

# மினிபஸ் கட்டண அதிகரிப்பு இறங்குவதற்கு மறுக்கிறது

(அச்சுவேலி)

எரிபொருள் தட்டுப்பாட்டை முன்னிட்டு அதிகரிக்கப்பட்ட தனியார் மினிபஸ் கட்டணங்கள் மீண்டும் பழைய நிலைக்கு திரும்புவதற்கு மறுக்கின்றன.

தனியார் மினிபஸ் கட்டண அதிகரிப்பு பற்றி பிரயாணிகளுக்கு துண்டுப் பிரசுரங்கள் மூலம் தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் விளக்கம் அளித்து கட்டணத்தை அதிகரித்தது.

அந்த நிலையில் கட்டண அதிகரிப்பை நியாயமானது என பிரயாணிகளும் ஏற்றுக் கொண்டு ஒத்துழைப்பு வழங்கினர்.

தற்பொழுது எரிபொருட்களின் விலைகள் பழைய நிலைக்கு வந்தபோதிலும் பிரயாணிகளிடம் அறவிடப்படும் கட்டணம் குறைக்கப்படவில்லை. இது பற்றி பிரயாணிகள் புகார் கூறியபோதிலும் தனியார் பஸ் சொந்தக்காரர்களோ சங்கங்களோ எதுவித விளக்கமும் கூறாமல் மௌனம் சாதித்து வருவதாக பிரயாணிகள் குறை கூறுகின்றனர்.

காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துக்கு எதிராக

# தீயினால் ஏற்பட்ட அழிவுக்கு நஷ்டஈடு கோரி வழக்கு!

(புலோலி)

தீயினால் ஏற்படும் அழிவுகளுக்கு எதிராகச் செய்யப்பட்ட காப்புறுதிக்கமைய வழங்கப்படவேண்டிய 3 லட்சம் ரூபா நட்டஈட்டுத் தொகையை இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் உரிய வர்த்தகர்களுக்கு வழங்க மறுத்தமையால், தனது காப்புறுதியின் படி 3 இலட்சம் ரூபாவையும் நட்டஈடாகச் செலுத்துமாறு தீர்ப்பளிக்கக் கோரிப் பருத்தித்துறை பிரபல வர்த்தகரொருவர் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்துள்ளார்.

பருத்தித்துறை மெயின்வீதியில் அமைந்துள்ள "ஆராகுல சூரியன்" புடவை விற்பனை நிலைய உரிமையாளர் திரு. என். சச்சிதானந்தம் என்பவரே இவ்வழக்கின் வழக்காளியவார். பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் சட்டத்தரணி க. முத்துக்குமாரு மூலமாகவே இவ்வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது இத் தீயினால் ஏற்பட்ட இந்நட்டம் குறித்து இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு அறிவித்தபோது இந்நட்டஈட்டுத் தொகையை வழங்க கூட்டுத்தாபனம் மறுத்தமையினாலேயே வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப் புடவை விற்பனை நிலையத்தின் தீயின் அழிவால் ஏற்படும் நட்டங்களுக்கு 3 இலட்சம் ரூபா வழங்க இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் ஒப்பந்தம் செய்து பொறுப்பேற்றிருந்ததாகவும் 1-9-1984 அன்று இப்புடவை விற்பனை நிலையம் தீக்கிரையாக்கப்பட்டமையால் நிலையம் முழுமையாகச் சாம்பராகியதாகவும் வழக்காளி மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வழக்கின் மூலம் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திடமிருந்து 3 லட்சம் ரூபா 1984 செப்டம்பர் முதற் திகதியிலிருந்து முழுத்தொகையும் செலுத்தப்படும் வரையும் சட்ட வட்டியையும் வழக்குச் செலவுத்தொகையையும் வேறு நிவாரணங்களையும் வழங்கத் தீர்ப்பளிக்குமாறு வழக்காளி கோரியுள்ளார்.

## இடமாற்றம்

(புலோலி)

அம்பாறை உள்ளூராட்சித் திணைக்களத்தில் ஆய்வு உத்தியோகத்தராகக் கடமையாற்றிய திரு. கே. இராசையா யாழ்ப்பாணம் உள்ளூராட்சித் திணைக்களத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இவர் பருத்தித்துறை நகரசபையினதும் பருத்தித்துறைத் தொகுதியிலுள்ள நான்கு யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபை உப அலுவலகங்களினதும், காங்கேசன்துறைத் தொகுதியில் உள்ள யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபையின் ஐந்து உப அலுவலகங்களினதும் ஆய்வு உத்தியோகத்தராகக் கடமையாற்றுவாரென அறிவிக்கப்பட்டுள்ளது.

வட்டாரக்கல்வி அதிகாரி பேச்சு:

# பாடசாலைகள் மீது கூடுதலான கண்காணிப்பு இவ்வருடத்தில் மேற்கொள்ளப்படும்!

(சாவகச்சேரி)

"கல்வித் திணைக்களத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட பாடசாலைகளின் திடீர் கண்காணிப்புக் குழுவினுடைய மேற்பார்வையும், கண்காணிப்பும், இந்தஆண்டு அதிகரிக்கப்படும். மேலதிக மேற்பார்வை மூலமும், கண்காணிப்பு மூலமுமே, பாடசாலைகளில் கற்றல், கற்பித்தல் ஆகிய தொழிற்பாடுகள் அதிகரிக்க முடியும்".

இவ்வாறு சாவகச்சேரி வட்டாரக்கல்வி அதிகாரி திரு. அ. தங்கராஜா சாவகச்சேரி கல்வி வட்டார அதிபர்கள் கொண்ட ஒரு மகாநாட்டில் தலைமை தாங்கி உரை நிகழ்த்துகையில் கூறினார். அவர் தொடர்ந்து கூறியதாவது:

இப்புதிய ஆண்டின் அதிபர்கள் நடவடிக்கைகளை அமுலாக்கும் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டும். மேலும் ஒரே வகுப்பில் தொடர்ச்சியாக இருந்து கொண்டு வகுப்பேற்றம் பெறத் தகுதியில்லாத மாணவர்களின் நாளாந்த பாடசாலை வருகையில் ஆசிரியர்கள், விசேடமாக அதிபர்கள் கவனம் செலுத்த வேண்டும். அப்பொழுதுதான் அந்த மாணவனின் கற்றல், கற்பித்தல் வகைகளில் முன்னேற்றமடையச் செய்யமுடியும் என்றும் வட்டாரக்கல்வி அதிகாரி திரு தங்கராஜா கூறினார்.

இருவேளை பாடசாலை வகுப்புகள் நடைபெற்றும் பாடசாலைகளில் இந்த ஆண்டு தொடக்கம், மீண்டும் இருநேர வகுப்புகள் தொடரும். அதன் மூலம் மாணவர் மத்தியில் கற்றலும், ஆசிரியர்கள் மத்தியில் கற்பித்தலும் ஊக்கமடையும். மேலும் பாடசாலைகளின் இல்ல விளையாட்டுப் போட்டிகள் போன்ற வைபவங்கள் நடத்தும் பாடசாலைகளின் அதிபர்கள் கண்டிப்பாக முதலாவது தவணையிலேயே தமது பாடசாலை விளையாட்டுப் போட்டிகளை முடித்துக் கொள்ள வேண்டும். தொடர்ந்து அடுத்தடுத்த தவணைகளில் மாணவர்களின் கற்றல்-கற்பித்தலுக்கே ஒதுக்கப்பட வேண்டும் என்றார் அவர்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில், பாடசாலை அனுமதி கோரி ஏராளம் மனுக்கள் வந்து குவிந்துள்ளன. இந்த மனுக்களை நன்கு பரிசீலித்து தகுதியின் அடிப்படையிலேயே அங்கு உள்ள இடங்கள் நிரப்பப்படும். இடமில்லாத பட்சத்தில் அயற்பாடசாலைகளில் இடமளிக்கப்படும் என்றும் திரு. தங்கராசா கூறினார்.

# பாடசாலைகள் இன்று மக்கள் சொத்துக்களாகி விட்டன

(புங்குடுதீவு)

"பாடசாலைகள் இன்று மக்கள் சொத்துக்களாகிவிட்டன. அவற்றைப் பேணிக்காப்பது மக்கள்தம் தலையாய கடமையாகும். பாடசாலை வாரம் இந்த உணர்வை மக்களின் மனதில் நிலைநாட்டப் பெரிதும் உதவுகிறது"

இவ்வாறு புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலய அதிபர் திரு த. துரைசிங்கம் பிரஸ்தாப வித்தியாலயத்தில் நடைபெற்ற பாடசாலை வார விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

கடந்த திங்கட்கிழமை காலை நடைபெற்ற இவ்விழாவில் அவர் தொடர்ந்து பேசுகையில், பாடசாலை வாரத்தில் மாணவர்களும், ஆசிரியர்களும் மேற்கொண்ட அரும்பணிகளைப் பெரிதும் பாராட்டினார்

கனிஷ்ட அதிபர் திரு க.த. தருமலிங்கம் உபஅதிபர் மற்றும் பலரும் இவ்விழாவில் உரையாற்றினர். இலவச பாடநூல் விநியோகம், மரம் நாட்டுதல், மண்டபங்களுக்கு வெள்ளையடித்தல், விளையாட்டு மைதானத்தைச் சீரமைத்தல் ஆதியாம் பல்வேறு பணிகள் இப்பாடசாலை வாரத்தின்போது இங்கு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

சுவாமி விவேகானந்தர்

# இந்துமத பெருமையை உலகறியச் செய்த உத்தமர்

(யாழ்ப்பாணம்)

"இந்து மதத்தின் தொன்மையை, கீர்த்தியை, தத்துவங்களை அறியாது மேற்கு நாட்டுக் கலாசாரத்தில் மூழ்கிக் கிடந்த எம்மவர்களையும், மேற்கு நாட்டாரையும் இந்து மதத்தைப் பின்பற்ற வைத்து வெற்றி கண்டவர் சுவாமி விவேகானந்தர்."

இவ்வாறு கோண்டாவில் மஞ்சத்தடி விவேகானந்த கிராம முன்னேற்றச் சங்கம் நடத்திய சுவாமி விவேகானந்தர் விழாவிலும், சிறுவர் விழாவிலும் உரையாற்றுகையில உடுவில் உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் கூறினார்.

சங்கத் தலைவர் திரு. வெ. கனகசபாபதி தலைமையில் பிரதம விருந்தினராக நல்லூர் உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். சிவகுருநாதன் கலந்து கொண்டு கந்தசஷ்டி மனனப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகளை வழங்கினார்

விவேகானந்தா சிறுவர் பாடசாலை மாணவர்களின் பாடல், பேச்சு, கவிதை, நாடகம் என்பனவும் இடம் பெற்றன.

## உடுபிடவை அன்பளிப்பு

(புலோலி)

புலோலி மேற்கு தம்பசிட்டியில் இருக்கும் அகதிகளுக்கு புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் உடுபிடவைகளை வழங்கியுள்ளது. இவ்வகதிகளுக்கு பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபரும் சுமார் 1,000 ரூபா பெறுமதியான உடுபுடவைகளை வழங்கியுள்ளார்.

பருத்தித்துறை அகதிகள் புனர்வாழ்வுச் சபைக்கு சற்றடே றிவியூ பத்திரிகை நிறுவனம் 10,000 ரூபா நிதியை வழங்கியுள்ளது. இச்சபைக்கு அமெரிக்காவில இருக்கும் திரு. ரீ. இராஜன் என்பவர் 1,500 ரூபாவை அனுப்பி வைத்துள்ளார் பருத்தித்துறை பிரஜைகள் குழுவும் சபைக்கு 2000 ரூபாவை வழங்கியுள்ளது.

கண்காட்சி விழாவில் தொழிலதிபர் பேச்சு:

# கிராமிய கைத்தொழில், வீட்டுத்தோட்டம் கால் நடைவளர்ப்பு அதிகரிக்க வேண்டும்

(புலோலி)

"கிராமங்கள் தோறும் சிறு கைத்தொழில் முயற்சிகள், வீட்டுத்தோட்டம், கால்நடை வளர்ப்பு போன்ற தொழில் முயற்சிகளை ஊக்குவிக்கவேண்டும் அப்போதுதான் எமது மக்கள் தமது வாழ்க்கையை வளம்படுத்திக் கொள்ளமுடிவதுடன் கிராமிய அபிவிருத்திகளையும் ஏற்படுத்தமுடியும். எமது பகுதிகளில் போதிய மூலவளங்கள் இருக்கின்றன. இம்மூலவளங்களை முழுமையாக நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இந்நிலையிலே வடமராட்சி கால்நடை வளர்ப்போர் சங்கம் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் பாராட்டப்படவேண்டியதாகும்"

இவ்வாறு வடமராட்சி கால்நடை வளர்ப்போர் சங்கத்தின் செய்முறைக்கண்காட்சி ஆரம்ப விழாவிலே பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய சிவதர்மவள்ளல் க. கனகராஜா குறிப்பிட்டார். புலோலி மெதடிஸ் மிஷன் பாடசாலையில் நடைபெற்ற இவ்விழாவிற்கு பேராசிரியர் வீ.கே. கணேசலிங்கம் தலைமை தாங்கினார். தொடர்ந்து உரையாற்றிய திரு. கனகராஜா 'எமது இயற்கை வளங்களைப் பாதுகாத்து அவற்றைத்தகுந்த முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். மரங்களை நாட்டுவதில் நாம் அதிக கவனமெடுக்க வேண்டும். மண்வளத்தைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும்' என்றார்.

வடபிராந்திய கால்நடை வைத்திய சுகாதாரத் திணைக்கள பதில் உதவிப் பணிப்பாளர் டாக்டர். எம். தங்கராஜா உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

"கிராமிய அபிவிருத்தி மேம்பாட்டில் இன்று கால்நடை வளர்ப்புகள் மிகமுக்கியத்துவம் பெறுகின்றது. வடமராட்சி கால்நடை வளர்ப்போர் சங்கம் நடாத்தும் இச்செய்முறைக் கண்காட்சி வடமராட்சிப்பகுதியின் அபிவிருத்திக்கு மிக இன்றியமையாததாகும். இது போன்ற பாரிய கண்காட்சியொன்றை நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் வடமராட்சி கால்நடை வளர்ப்போர் சங்கம் நடாத்தியதையும் மறந்து விடமுடியாது. இக்கண்காட்சிகளால் பல நன்மைகளை நாம் பெற்றுக் கொள்ளமுடியும்."

பேராசிரியர் வீ கே. கணேசலிங்கம் தலைமை உரையில்,

"உள்ளூர் உற்பத்தி பொருட்களின் உற்பத்தி முறைகளை அபிவிருத்தி செய்வதுடன், உள்ளூர் உற்பத்திப் பொருட்களை மக்கள் பாவிப்பதற்கும் முன்வரவேண்டும் இறக்குமதிப் பொருட்களைப் பாவிக்கும் மோகம் தீரும்வரை எமக்குச் சுபீட்சம் கிடைக்காது. எனவே உள்ளூர் மூலவளங்களைப் பயன்படுத்து உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு நாம் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். இச்செய்முறைக் கண்காட்சி போன்ற கண்காட்சிகள் உள்ளூர் மூலவளங்களை முழுமையாகப் பயன்படுத்தி எமது பொருளாதாரத்தை மேம்படுத்த வழி வகுக்கும்" என்றார்.

★ ஒரு கடிதம்

# தீவுப்பகுதிப் பாதையில் பஸ்சேவை படும்பாடு

ஐயா!

ஏற்கனவே சீர் கெட்டுப்போயிருந்த தீவுப்பகுதி பஸ் சேவைகள் சென்ற வாரத்துடன் நின்று விடும் நிலைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

சமீபத்தில் பண்ணையில் நடந்த வன்செயலைக் காரணங்காட்டி பஸ் குழுவினர் சிலர் தீவுப் பகுதி பஸ் சேவை செய்ய மறுத்து வருவதாகச் சொல்லப்படுகின்றது

கடந்த காலத்தில் தீவுப் பகுதிக்சென்றே பஸ் கம்பனியொன்று இருந்து தீவு வாழ் மக்களுக்கு அளப்பரிய சேவை செய்ததை எவரும் மறந்துவிட முடியாது. பஸ் தேசிய மயமாக்கலுக்குப் பின்னர் நல்ல முறையில் நடைபெற்று மிகுந்த வருமானத்தை ஈட்டிக் கொடுத்து வந்த தீவக பஸ் சேவைகள் இ. போ. ச. வின் தற்போதைய மாற்றாந்தாய் மனப்பான்மை கொண்ட நிர்வாகத்தினால் சீர்குலைக்கப்பட்டுள்ள துர்ப்பாக்கிய நிலையை அடைந்துள்ளது.

'நொண்டிக் குதிரைக்குச் சறுக்கின சாட்டு' என்ற முதுமொழிக்கிணங்க சமீபத்தைய வன் செயலைக் காட்டி தீவக சேவைகள் ஒன்றோ இரண்டுடன் நிர்வாகத்தால் நிறுத்தப்பட்டு விடுகின்றது. ஆனால் மினிபஸ்களோ காலை 6 மணி தொடங்கி மாலை 6-30 மணி வரை சேவை நடாத்துகின்றனவே!

இப்போது காலைப்பாடசாலை சேவைகள் விடப்படுவதில்லை. மாலையில் 5மணிக்குகடைசிபஸ் ஓடவிடப்படுவதில்லை இதனால் அரச ஊழியர்கள் தனியார் துறைப் பஸ் பாவனையாளர்கள் மிகவும்பாதிக்கப்பட்டுள்ளனர்.

பொதுமக்களின் நன்மைக்காக உண்டாக்கப்பட்ட இ. போ. ச. நிறுவனம் இன்று எங்கே செல்கின்றது? இது ஆண்டவனுக்கே வெளிச்சம்.

எஸ். நடராஜன்

## நியமனம்

கச்சாய் பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் திரு. க. சுந்தரலிங்கம் அண்மையில் நியமனம் செய்யப்பட்ட கலைப்பட்டதாரி ஆசிரியர்களில் ஒருவராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

உதய சிந்தனை

சுய நலத்தின் அடிப்படையில் புகழ் உருவாகுமானால் அங்கு குற்றங்கள் மலிந்திருக்கும் — நேரு

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 23336

## இதய ஒலி

18.1.86 சனிக்கிழமை (குரோதன) தை 5

# ஒட்டகத்தின் தலைக்கு இடம் கொடுத்த கதை

தமிழர் பாரம்பரிய பிரதேசங்களை படைபலம் கொண்டு ஆக்கிரமிக்கும் அரசியல் சூழ்ச்சியின் ஆரம்பகட்ட நடவடிக்கைகளாக, கிழக்குப்பிரதேசம், வன்னிப்பிரதேசம் ஆகிய பகுதிகளில் மாதக்கணக்காக நடத்தப்பட்ட தாக்குதல்களை அனைவரும் அறிவர்.

எஞ்சியுள்ள யாழ்ப்பாணக் குடாநாட்டில் பிரகடனப்படுத்தாத யுத்தத்தின் முக்கிய காலகட்டம் இப்போது ஆரம்பமாகியுள்ளது.

ஓராண்டுக்கு முன்னர் அறிமுகப்படுத்தப்பட்ட கடல் கண்காணிப்பு வலயம், போக்குவரத்துப் பாதுகாப்பு வலயம் ஆகியவைகளின் அடுத்த அடுத்த அம்சமாக, யாழ்ப்பாண மாவட்டத்துக்கு மட்டுமென மற்றுமொரு வலயம் இப்போது பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

இங்குள்ள இராணுவ முகாம்களைச் சூழவுள்ள ஆயிரம் மீட்டர் பகுதியை பாதுகாப்பு வலயமென்று அரசாங்கம் பிரகடனப் படுத்தியுள்ளமையையே குறிப்பிடுகின்றோம்.

ஆயிரம் மீட்டர் என்பது ஒரு கிலோ மீட்டர் தூரமாகும். இது சுமார் முக்கால் மைல் தூரத்தைக் கொண்டதாகும்.

யாழ்ப்பாணம் கோட்டை இராணுவ முகாமைச் சுற்றி ஒரு கிலோ மீட்டர் தூரத்தைக் கணக்குப் பார்த்தால், நகரின் கேந்திர நிலையமான முழுப் பகுதியுமே ராணுவ பாதுகாப்பு வலயத்துக்குள் அடங்குகின்றது.

யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரி, மூன்று நீதிமன்றங்கள், மத்திய பஸ் நிலையம், பிரதான தபால நிலையம், வடபகுதி தொலைபேசிப் பரிவர்த்தனை நிலையம், யாழ். தேசிய கூட்டுறவுச் சபை அலுவலகம், யாழ். மாவட்ட தொழிற்சந்தோர், உள்நாட்டு இறைவரி பிரதேச அலுவலகம், சகல வங்கிகளினதும் பிரதேச தலைமை அலுவலகங்கள் என்று இவ்வலயத்தினுள் அடங்கும் முக்கிய இடங்களின் பட்டியலை நீட்டிக்கொண்டே போகலாம்.

பொதுமக்கள் பெருமளவில் வாழும் யாழ்ப்பாண பஜார், நவீன சந்தை, மரக்கறி மீன், இறைச்சி மார்க்கட்டுகள் என்று சகல சந்தைகளுமே குறிப்பிட்ட ஒரு கிலோ மீட்டர் தூரத்துக்குள் அடங்குகின்றன.

இந்தப் பகுதிக்குள் பீரங்கி போன்ற பயங்கர ஆயுதங்களைப் பாவிக்க இராணுவத்தினருக்குப் பூரண அதிகாரமும் வழங்கப்பட்டுள்ளது.

இதனால், "இப்பகுதியில் இராணுவம் தாக்குதல் நடத்தும்போது பொதுமக்களும், அவர்களின உடைமைகளும் பாதிக்கப்படுவது தவிர்க்க முடியாதது" என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

எனவே பொதுமக்கள் அவதானமாக இருக்கவேண்டுமென எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளனர்.

இதனைக் கொஞ்சம் விளக்கமாகச் சொல்வதானால், யாழ்ப்பாண நகரப்பகுதிக்குள் நடமாடுபவர்கள் எவராக இருந்தாலும், அவர்கள் இராணுவத்தினரின் தாக்குதல்களினால் மரணமடைய நேரிடலாம்.

நேற்று முன்தினம் அதிகாலை யாழ்நகரில் இடம்பெற்ற தாக்குதலும், அதனால் ஏற்பட்ட மரணங்களும் இதற்கு நல்லதொரு சான்றாகும்.

இந்த வகையில் பார்க்கும்போது, நகருக்குள் அமைந்திருக்கும் வேம்படி மத்திய கல்லூரி, வைத்தீஸ்வரா போன்ற பாடசாலைகளையும் கூட உடனடியாக இடம்மாற்ற வேண்டிய அவசிய நிலை இப்போது ஏற்பட்டுள்ளது

நகருக்குள் பொது மக்கள் வருவது "எச்சரிக்கை" யின் மூலம் தடை செய்யப்படுகின்றது.

இங்குள்ள அரசாங்க, தனியார் துறை, வர்த்தக நிலைய ஊழியர்கள் எவ்வாறு தமது தொழிலுக்குச் செல்ல முடியும்?

இதனால் பொருளாதார, உயிர், உடைமை அழிவுகள் கணக்கில் கொள்ள முடியாத வகையில் ஏற்படப் போவது தவிர்க்க முடியாததாகப் போகின்றது.

இதற்குக் கட்டியம் கூறுவது போல உத்தியோக பூர்வ எச்சரிக்கை பிரகடனமாகியுள்ளது.

கண்காணிப்புக் குழு விசாரணைகளின் போது ஆஜரான பிரஜைகள் குழுக்கள், பொது மக்கள் அடர்த்தியாக வாழும் பகுதிகளிலுள்ள ஆயுதப்படை முகாம்களை, வேறு இடங்களுக்கு மாற்ற வேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுவந்ததன் 'தீர்க்க தரிசனம்' இப்போதுதான் மக்களுக்குப் புலனாகியிருக்கும்.

கூடாரத்துக்குள் தலையை விட ஒட்டகத்துக்கு இடம் கொடுத்த கதை போல இப்போது நிலைமை மாறிவிட்டது.

மக்கள் நெருக்கமாக வாழும் பகுதிக்குள் முகாம் அமைத்தவர்கள், இப்போது தம்மைச் சுற்றியுள்ள ஒரு கிலோ தூரத்தை நிர்மூலமாக்க முயற்சிப்பது எந்த வகையில் நீதியான செயலாகும்?

மக்களைப் பாதுகாக்க வேண்டிய அரசாங்கம், முகாம்களைப் பாதுகாப்பதற்காக மக்களை அச்சுறுத்துவது 'லங்கா தார்மீகம்' போலும்!

இதற்கு மக்கள்தான் விடையளிக்க வேண்டும்.

# இணக்க உரையாடல்கள் புத்துயிர் பெறமுடியுமா?

அதிகார உரித்தாக்கல் அல்லது பரவலாக்கல் குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணியினால் வரையப்பட்ட புதிய பிரேரணைகளின் தொகுப்பொன்று பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தியினால் இலங்கை ஜனாதிபதி ஜூனியஸ் ஜெயவர்த்தனவிடம் டாக்கா மாநகரில் வைத்துக் கையளிக்கப்பட எடுத்துச் செல்லப்பட்டமை, மரத்துப் போயிருந்த இணக்க உரையாடல்களுக்குப் புத்துயிரூட்ட வல்லனபோலத் தோன்றின.

பேச்சுக்கள் உயிரிழந்துபோகக் காரணம் இலங்கை அரசாங்கத்தின் நகல் திட்டம் தமிழர் விடுதலை இயக்கங்களின் எதிர்பார்ப்புகளைவிடப் பாரிய அளவு இறக்கமாக இருந்தமையால் ஏமாற்றத்திற்கு ஆளாகிய இயக்கங்கள் அதனை நிராகரிக்கவே, உருப்படியான வாத விடயங்கள் மீதான உரையாடல்கள் உயிரற்றன ஆயின. இத்துடன் சேர்ந்து கொழும்பு அரசின செயல்களும் கொள்கையும் போர் இடைநிறுத்த உடன்பாட்டை மீறின. அதனால், இலங்கை அரசு மிக அதிகமாக விரும்பியது ஓர் இராணுவத் தீர்வையே எனப் பொருள் கோடப்படலாயிற்று. இந்நிலைமைக்கு ஓரேயொரு பதிலாக அமையக்கூடியது, நிலைப்பாட்டில் விறைப்பேறியமையே ஆயிற்று.

இவை நடந்தேறிக்கொண்டு இருக்கையில், தமிழர் விடுதலை இயக்கங்கள், பிரதிப் பிரேரணைகளை முன்னிலைப்படுத்த முன்வராது, நிலைமை சமாதானத்திற்கு மீள்வதிற் தங்கள் விளைக்கின்றன என, சகல தரப்பியுடனும் கூறிக்கொண்டு கொழும்பு அரசு பின்வாங்கல் நடவடிக்கையில் இறங்கியது இந்தியப் பிரதமர் சென்னையில் வைத்துப் பகிரங்கமாக ஈழம் தேசிய விடுதலைப் போராளிகள் மீது கண்டனக் கணை தொடுத்தபோது, சகித்தற்குச் சற்று அரிதான ஒரு பொறுமையிழந்த தன்மை அவரது குரலில் தென்பட்டது. இவ்வுரையாடலில் அடுத்த தாக்கச் செயலில் இறங்கவேண்டிய தமிழர் தரப்பு மாற்றுவழிப் பிரேரணைகளைக் கொண்டுவருதல் வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்தார்.

இந்திய அரசு ஓரளவு பின்னின்று தூண்டியமையின பின்னர், ஈழம தேசிய விடுதலை முன்னணியிற் பிரதிநிதித்துவம் வகிக்கும் போராளி இயக்கங்களும், 'புளொட்' இயக்கமும் ஈற்றில் தம் மனக்கிடக்கையைத் தெளிவுபடுத்தின, தமிழ் ஈழம் எனும் தனிவேறான தமது தேச அரசுக் கருத்தேற்பு தவிர்ந்த மாற்றுக் கோரிக்கை ஒன்றை முன்வைக்கும் விருப்பம் அவர்களுக்கு இருக்கவில்லையாயினும், இலங்கையில் தமிழர் பிராந்தியங்களுக்கு மேலும் அதிக அதிகாரங்களை நிர்ப்பந்தித்துப் பெற்றுத்தர வல்ல ஒரு மாற்றுவழிச் சட்டக்கோப்பினை நகலாக வரைவதில், இணக்க உரையாடல்களில் அநேக ஆண்டுகள் அனுபவமுடைய தமிழர் விடுதலைக் கூட்டணி தனது 'கைவரிசையைக் காட்டுவதற்குத்' தாங்கள் தடையாக நிற்கப்போவதில்லை என அவை தெளிவாகக் கூறின.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் கருத்தேற்பில் உருவமைந்த அரசியல் தொடர்பான அரசியலமைப்புப் பிரேரணை, ஒரு சமஷ்டித் தத்துவத்தின் அடிப்படையில் இயங்குகிறது. அங்கு, மத்திய அரசின் அதிகாரங்களினின்றும் மாநில அரசின் தத்துவங்கள் தெளிவுற வரையறுத்து, பிரித்துக் காட்டப்பட்டுள்ளன. இலங்கைத் தீவின் வடக்கு மாகாணமும் கிழக்கு மாகாணமும் ஒன்றுசேர்ந்து ஓரே மொழியிற் கருமம் ஆற்றும் அரசாக உருவாதல், அதாவது அரசுகளின் ஓர் ஒன்றியம், கருத்தில் இடம்பெறுகிறது. ஒருகால் தம்பிதமானதும், இப்பிராந்திய ஒருமைப்பாடானது இம்மொழி அரசின் ஒருப்பாடு (சம்மதம்) இன்றி மாற்றியமைக்கப்படுவதற்கு உரியதல்ல.

> 'புரன்ட் லைன்' சஞ்சிகையில் வெளியான ஆசிரிய தலையங்கத்தின் தமிழாக்கம்.

நிலம், கல்வி, சட்டம், ஒழுங்கு என்பன உள்ளடங்கலாக, இவ்வரசுகளின் நிதர்சன அதிகாரத்தின் கீழ் வருவன என அட்டவணைப்படுத்தப்பெற்ற விடயங்கள் தொடர்பில், பூரண சட்டவாக்க, நிறைவேற்று அதிகாரங்களை இந்த அரசுகள் பிரயோகிப்பன ஆதல் வேண்டும்.

இந்த அரசுகளின் சட்டம் ஆக்கும் அதிகாரங்களானவை நேரடியாகத் தெரிவு செய்யப் பெற்ற பேரவைகளின் வசம் உரித்தாக்கப்பட வேண்டியன ஆகும். பிராந்தியமாக எல்லை குறிக்கப்பட்ட ஒரு தேர்தற் தொகுதி அடிப்படையில் அவற்றுக்கான தேர்தல்கள் இருத்தல் வேண்டும். தமிழர் பிரதேசங்களில் வசிக்கும் முஸ்லிம்களின் அச்சங்களை மனதில் இருத்தியுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி, வடக்கும் கிழக்கும் இணைந்தனவாகுமிடத்து அவர்கள் இடம்பெற்று இருப்பது சனத்தொகைச் செறிவைக் குறைக்கலாம் என்பதனால், பிரேரிக்கப்பட்ட புதிய நாட்டு அரசியல் கனங்காத்திரமாக்கப்பட்ட பிரதிநிதித்துவம் அவர்களுக்குக் கிடைப்பது உறுதி செய்யப்படும் எனக் காட்டியுள்ளது.

இவ்வரசுகளின் நிறைவேற்று அதிகாரங்களானவை அமைச்சர்களின் அவையொன்றினால் பிரயோகிக்கப்படும். அரசின் சட்டவாக்க அமைப்பின்கண்ணுள்ள ஆகப்பெரும் கட்சியினின்றும் ஈர்த்தெடுக்கப்பெற்ற இவ்வமைச்சர்கள் ஒரு முதலமைச்சரை உடையோராக இருப்பர்.

மத்திய அரசு மாநில அரசுத் தொடர்புகள் சம்பந்தமான கசப்பூட்டும் வரலாற்று அனுபவத்தையிட்ட ஒரு துல்லிய நோக்குக் கோணத்தினின்றும் எழுந்ததே தமிழர் விடுதலைக் கூட்டணியின் சமஷ்டிக் கருத்தேற்பு. கூட்டணி, இப்புதிய திட்டத்தில், அங்ஙனம் அடிக்கடி உராய்வுகள் ஏற்படும் வாய்ப்புகளைக் குறைத்துக் கொள்ளப்பார்த்துள்ளமை தெரிகிறது. உதாரணமாக, ஒன்றில் மத்திய அரசின்கீழ், அல்லது மாநில அரசுகளின்கீழ், வருவன என அட்டவணைப்படுத்தப்பட்ட அதிகாரங்கள் உள்ளன. அதேவேளை பகிர்ந்து கொள்ளப்பட்ட அதிகாரங்களுக்கோ சமகால நிதர்சன அதிகார பாலனத்திற்கோ அங்கு ஏற்பாடு கிடையாது.

(திங்கள் தொடரும்)

# நற்பணிகள் பல புரிந்த அமரர் வைத்திலிங்கம்

யாழ்ப்பாணம் திவ்ய ஜீவன சங்கத்தின் செயலாளரும் சிறந்த கட்டடப் பொறியியலாளருமான அன்பர் திரு. இ. வைத்திலிங்கம் அவர்களின் திடீர் மறைவு எம்மை அதிர்ச்சிக்கும் ஆற்றொணாக் கவலைக்கும் உள்ளாக்கி விட்டது யாழ். திவ்ய ஜீவன சங்கத்துக்கு மட்டுமல்ல சைவத்துக்கும், தமிழ் இனத்துக்கும் வழிகாட்டிய க நேர்மை, நீதி, கருணை, சரி எனப்பட்டதைச் செய்து முடிக்கும் அஞ்சாமை இவற்றை எல்லாம் தனது இலட்சியங்களாகக் கொண்டு அவர் யாழ் நகரில் செய்த பணிகளை நாம் மறக்க முடியாது.

யாழ்ப்பாணம் திவ்ய ஜீவன சங்க ஆச்சிரம மண்டப வேலைகள் ஆரம்பமாகி பல காலம் அக்கட்டட வேலைகள் தொடராமல் சுவாமி சிவானந்தரின் அடியார்கள் கவலையோடு இருந்த காலத்தில் அன்பர் வைத்திலிங்கம் தனது தொழில் நுட்பத் திறனை முழுமையாகப் பிரயோகித்து, ஆச்சிரமக் கட்டட வேலையைத் திறம்பட முடித்து ஆச்சிரம மண்டபத்தில் சுவாமி சிவானந்த மகரிஷியின் உருவச் சிலை, தெட்சணாமூர்த்தியின் திருவுருவம் ஆகியவைகளை ஸ்தாபித்த அன்னாரின் அரும் பணியை சிவானந்த அடியார்கள் என்றும் மறக்க மாட்டார்கள்.

சுவாமி சிவானந்தரின் அரிய போதனைகளான அன்பு செய், சேவை செய், கொடுத்துப் பழகு, தியானம் செய் என்பவற்றைத் தனது சொந்த வாழ்வில் அநுஷ்டித்து சுவாமி சிவானந்த மகரிஷியின் உண்மைத் தொண்டனாக அன்பர் வைத்திலிங்கம் ஆன்மீகப் பணியாற்றியதை நாம் எல்லோரும் அறிவோம்.

யாழ் நகருக்குப் புகலிடம் தேடி வந்த திருமலை அகதிகளின் துயர் துடைக்க அகதிகள் முகாமுக்குச் சென்று, அகதிகளுக்கு ஆறுதல் கூறி, பல பெறுமதியான பொருட்களை அன்பளிப்புச் செய்து அகதிகளுக்கு அன்னமிட்ட அமரரின் கை உலர முன், அமரரின் ஆவி பிரிந்த செய்தி தமிழ் மக்களை ஆறாத்துயரில் ஆக்கியதை நாம் அனைவரும் அறிவோம்.

அமரர் தமிழகத்திற்கு செல்லும் போது பல சேத்திரங்களையும், ஆன்மீகத்துறைகளையும் தரிசிக்கத் தவறுவதில்லை. சுவாமி சிவானந்த மகரிஷியின் தரிசனத்தை நேரடியாகப் பெற்று, அவரின் ஆசிகளைப் பெற்ற பெரும் பேறு அமரர் வைத்திலிங்கத்துக்கு உரியது.

— 5 ம் பக்கம் பார்க்

# பாரதம்-பாஹ்ரேன் இருதரப்பு உறவு வளர உடன்படிக்கை!

(லண்டன்)

**பாரதமும், பாஹ்ரேனும் இருதரப்பு ஒத்துழைப்புகளை வலுப்படுத்திக் கொள்ளும் பொருட்டு உடன்படிக்கை ஒன்றினைச் செய்துகொண்டுள்ளது. பாரத வெளிநாட்டமைச்சர் திரு. பி. ஆர் பஹத் மேற்கொண்ட பாஹ்ரேன் விஜயத்தின் போது இவ்வுடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. இது ஐந்து வருடகாலத்துக்குச் செல்லுபடியாகும்.**

பாரத வெளிநாட்டமைச்சர் முன்னதாக ஈரான், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகியவற்றிற்கும் பயணம் மேற்கொண்டிருந்தார்.

வளைகுடா நாடுகளின் ஒற்றுமைக்கும், உறுதிப்பாட்டுக்கும் பாரதம் ஆற்றிவரும் பணியை மேற்படி நாடுகள் பெரிதும் பாராட்டின.

அணிசேரா நாடுகளின் இரு உறுப்பு நாடுகளான ஈராக்கும், ஈரானும் யுத்தத்தில் ஈடுபட்டு வருவது குறித்து பாரதத்தின் கவலையை பாரத வெளிநாட்டமைச்சர் தனது ஈரானிய விஜயத்தின்போது வெளியிட்டிருந்தார்.

அவர் வளைகுடா நாடுகளுக்கான தன் பயணத்தை முடித்துக் கொண்டு நேற்று நாடு திரும்பினர்.

## குண்டு வெடிப்பு

(லண்டன்)

அபுதாபியில் உள்ள ஒரு பிரயாண முகவர் நிலையத்தில் நேற்றுக் காலை திடீரென குண்டு ஒன்று வெடித்தது. ஆனல் உயிர்ச்சேதங்கள் எதுவும் இடம் பெறவில்லை எனவும் கட்டடங்களுக்கு சிறிது பாதிப்பு ஏற்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

இது சம்பந்தமாக அபுதாபி பொலிசார் புலன் விசாரணையை மேற்கொண்டுள்ளனர்.

## தென் யேமனில் யுத்தம் நீடிப்பின் லிபிய தலையீடு?

(ஏடன்)

தென் யேமனில் தொடர்ந்தும் சண்டை நடைபெற்றால் லிபியா தனது படைகளை அனுப்பலாம் என லிபிய ஜனதிபதி கேர்ணல் கடாபி அறிவித்துள்ளார்.

இதேவேளை தென் யேமனில் சில இடங்களில் தொடர்ந்து வெடிச் சத்தங்கள் கேட்பதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் அறிவிக்கின்றன. நேற்று முதல் தென் யேமன் வானெலி மீண்டும் இயங்கத் தொடங்கியது.

## ஹொங்கொங் வாழ் பாரத இனத்தவர் மீள விருப்பில்லை

(லண்டன்)

ஹொங்கொங்கில் வாழும் இந்தியர்கள் தாம் மீண்டும் இந்தியா செல்ல முடியாது என தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக அவர்களின் பிரதிநிதியான லக்ஷ்மன் நாராயணன் பேச்சுவார்த்தை நடாத்த லண்டன் வந்தார்.

ஹொங்கொங் விரைவில் சீனவிடம் ஒப்படைக்கப்படவிருப்பதால் இந்தப் பிரச்சினை அங்கு தோன்றியுள்ளது.

இந்த ஹொங்கொங் இந்திய பிரஜைகள் தாம் பல காலமாக ஹொங்கொங்கில் வாழுவதாகவும் அதனல் மீண்டும் இந்தியா திரும்பிச் செல்ல விரும்பவில்லை எனவும் அவர்கள் கோரியுள்ளனர்.

திரு. நாராயணன் பிரிட்டிஷ் குடிவரவு மற்றும் வெளியுறவு அமைச்சு அதிகாரிகளுடனும் இது தொடர்பாக பேச்சுக்கள் நடத்தினர்.

## பிரார்த்தனை கீர்த்தனை

(புதுடில்லி)

பஞ்சாப்பில் சீக்கிய குரு கோவிந்த்சிங்கின் ஜனன தினம் நேற்று விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

இதனையொட்டி பிரார்த்தனைகளும், கீர்த்தனைகளும் இடம்பெற்றன,

## இன ஒதுக்கல், நமீபிய, அங்கோலா நிலை தென்னுபிரிக்காவில் அமெ. பிரதிநிதி பேச்சு

(ஜொஹனஸ்பேர்க்)

தென்னுபிரிக்காவின் இன ஒதுக்கல் போக்குத் தொடர்பான தமது அரசின் நிலைப்பாட்டைப் புரியவைக்கும் பொருட்டு அமெரிக்க அமைச்சர் திரு. கிரேகர் தற்போது தென்னுபிரிக்கா வந்துள்ளார்.

இன ஒதுக்கல் கொள்கையின் மாறுதலை அவர் வற்புறுத்துவார் என்றும் குறிப்பாக நமீபிய விடுதலை, அங்கோலா போர் குறித்து அவர் தென்னுபிரிக்கப் பிரிடோரிய அரசுடன் தீவிரமாக விவாதிப்பார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## அரபுலீக் மாநாடு தீர்மானம்

(டமஸ்கஸ்)

அரபு ஆபிரிக்க நாடுகளில் இருந்து இஸ்ரேலுக்கும் தென்னுபிரிக்காவுக்கும் பொருளாதாரத் தடைகளை ஏற்படுத்த வேண்டும் என இங்கு நடைபெற்ற அரபுலீக் மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது. இந்த விவகாரத்தில் சகலரும் ஐக்கியமாகச் செயற்படவேண்டும் என சிரியா கோரியுள்ளது.

## சென்னையில் பிரான்ஸ் கப்பல்

(சென்னை)

இந்துமாகடலில் நிலை கொண்டுள்ள பிரான்ஸ் கப்பல் 'வாஸ்' சென்னை துறைமுகத்தை நல்லெண்ண விஜயமாக வந்தடைந்தது.

இக்கப்பலின் கெப்டன், ஆளுநர் திரு எஸ். எல் குரானவையும் முதலமைச்சர் திரு எம். ஜி. இராமச்சந்திரனையும் சந்தித்துச் சம்பாஷணை நடத்தினர்.

## நற்பணிகள்....

- 4ம் பக்கம் பார்க்க

அமரர் வைத்திலிங்கத்தின் இல்லத்துக்குப் பல இந்து சமயத் துறவிகளும், அடியார்களும் விஜயம் செய்து அமரரின் இல்லம் ஓர் ஆச்சிரமம் போல இருந்ததை நாம் அனைவரும் அறிவோம்.

கவியோகி சுத்தானந்த பாரதியின் உண்மைச் சீடராக விளங்கிய அமரர், கவியோகியின் மேல் கொண்டுள்ள உண்மைப் பற்றுதலினல் தனது மைந்தனுக்கு சுத்தானந்தன் என நாமம் இட்டு வளர்த்து வந்தார். அமரரின் பிரிவை அறிந்து கலங்கிய சுவியோகி, தனது தள்ளாத வயதில் தனது கைப்பட கவிதை வடித்துத் தனது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்தியமை அமரரில் கவியோகி வைத்திருந்த உண்மைஅன்பைப் பிரதிபலிக்கின்றது.

யாழ்நகரில் அடியார்களுக்கு ஆத்மீக சாந்தி அளிக்கும் திவ்ய ஜீவன சங்க ஆச்சிரம மண்டபம், நல்லைக் கந்தன் ஆலய மணி மண்டபம், நல்லைக்கந்தன் சித்திரத்தேர் தரிக்கும் மண்டபம், நயினை நாகபூஷணி அம்பாள் ஆலய மணி மண்டபம், நல்லை நாவலர் மணி மண்டபம், யாழ். திறந்தவெளி அரங்கு, யாழ்ப்பாண நகர எல்லையில் வந்தோரை வரவேற்கும் நுழைவாயில் ஆகியவைகள் என்றும அமரர் வைத்திலிங்கத்தின் தொழில் நுட்பத் திறமையின் புகழைப் பாடும்.

மண்ணோடு மண்ணுய்ப் போகும் இம்மட்பாண்டம், இம்மண்ணுடம்பு இதன் அழிவைக் கண்டு கலங்குவது மனித இயல்பு. ஆனல் ஜீவாத்மா என்றுமுளது அழியாதது. அதனைப் பற்றித் தொடர்வது இருவினைப் புண்ணிய பாவமுமே. சிதறும் சிந்தனை இன்றி இறைவன் திருநாமத்தை இடையறுது சிந்திப்பவர்க்கு இடையூறின்றி பக்தியின் உச்ச நிலை பரகதி. அந்த வகையில் அமரர் திரு. வைத்திலிங்கம் அவர்களின் ஜீவாத்மாவும் எம்மான் பொற்பாதங்களைச் சார்ந்து நிரதிசய நித்தியானந்த பெருவாழ்வு எய்துமாறு உளமாரப் பிரார்த்திக்கிறேன்.

ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி.

சி. கனகரத்தினம்-
ஜே. பி, யூ. எம்.

தலைவர்-யாழ். திவ்ய ஜீவன சங்கம், யாழ்ப்பாணம்; தலைவர்-வடபிராந்திய போக்கு வரத்துச் சபை, அரச சட்டத்தரணி.

# சின்னஞ்சிறு செய்திகள்

## வைத்திய அதிகாரி வேண்டும்

முருங்கன் அரசினர் வைத்திய சாலைக்கு வைத்திய அதிகாரி ஒருவரை நியமிக்கும்படி கோரிக்கை விடப்பட்டுள்ளது.

இதுசம்பந்தமாக வவுனியா சுகாதார சேவைப் பணிப்பாளருக்கு முருங்கன் உப அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் திரு சிவ. சங்கரப்பிள்ளை அனுப்பிவைத்த மகஜரொன்றில், 4,500க்குமேலான பொதுமக்களை கொண்டதும் எல்லா வகையிலும் பின்தங்கிய கிராமங்களைக் கொண்டதுமான முருங்கன் பகுதிக்கு வைத்திய அதிகாரி ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்கப்பட்டுள்ளது.

## விஸ்தரிப்பு பணி துரிதம்

(நீர்வேலி)

நீர்வேலி உப - அபிவிருத்தி அலுவலக இட நெருக்கடியைப் போக்குமுகமாக நிலைய வளவினுள் அறுபத்தையாயிரம் ரூபா செலவில் புதிய கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வலுவலக விஸ்தரிப்பு வேலைகள் யாவும் முடிவடைந்து விரைவில் இது திறக்கப்படவுளளது. மேலும் இந்நிலைய வளவில் புதிய நூலகம் ஒன்றை அமைக்க ஒன்றரை இலட்சம் ரூபா யாழ். அபிவிருத்தி அலுவலகத்தின் அனுமதியின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நூலக அமைப்பு வேலைகளும் எதிர் வரும் மாதத்தில் ஆரம்பமாகும் என அறிவிக்கப்படுகிறது.

## ஐவருக்கு பரிசு கிடைத்தது

(வல்வெட்டித்துறை)

வடமராட்சி மக்கள் வங்கி ஊழியர் நலன்புரிச் சங்கத்தினரால் நடாத்தப்பட்ட 85 ம் ஆண்டுக்கான இலவச சுருக்கெழுத்து தட்டச்சு பயிற்சி வகுப்புகளில் பரிசு பெற்ற ஐவரில் மூவர் அல்வாயைச் சேர்ந்தவர்களாவர்.

பரிசு பெற்றோர் விபரம் வருமாறு: செல்வி க பத்மராதா (அல்வாய்) - (ஆங்கில சுருக்கெழுத்து – வேகம்) செல்வி இ யோகேஸ்வரி (அல்வாய்)- (ஆங்கில தட்டச்சு - வேகம்) செல்வி சி. நீலாம்பிகை (அல்வாய்) - (ஆங்கில தட்டச்சு- பொது) செல்வி லி. கயல்விழி (வல்வை) - (ஆங்கில தட்டச்சு) செல்வி த, மாலினி (கரவெட்டி) (தமிழ் - சுருக்கெழுத்து)

## பாரிய மரங்கள் தறிப்பு

(அரியாலை)

அரியாலை கண்டி வீதியில் உள்ள பாரிய மரங்கள் தறிக்கப்பட்டுள்ளன. மாம்பழம் சந்தி, சரஸ்வதி நூல் நிலையம் ஆகிய இடங்களில் நின்ற பாரிய ஆலமரங்கள் தறிக்கப்பட்டுள்ளதால் இப்பகுதி மக்கள் பெரிதும் கவலையடைந்துள்ளனர். மாம்பழம் சந்தி மரம் பஸ்தரிப்பு நிலையத்திற்கு அருகில் நின்றதால் நிழல் கொடுத்தும், நூல் நிலைய மரம் இக்கட்டடத்திற்கு அழகையும் கொடுத்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

மீண்டும் இவ்வாறுன மரங்கள் வளர்ப்பது கடினம் என்றும் கூறப்படுகிறது. அதிக மின்வலுவுள்ள கம்பிகள் பொருத்துவதற்காகவே தறிப்பு வேலைகள் நடைபெறுகின்றன என தெரியவருகிறது.

## வீதிச்சீரமைப்பு விரைவுபட வேண்டும்

(உடுவில்)

சமீபத்திய மழையினல் குடாநாட்டின் சகல பகுதிகளிலுமுள்ள வீதிகள் வெகுவாகப் பாதிப்படைந்துள்ளன, இவற்றில் யாழ்ப்பாணத்திலிருந்து காங்கேசன்துறைக்குச் செல்லும் மிகப் பிரதான பாதையும் ஒன்ருகும். ஏனைய பிரதான பாதைகளோடு ஒப்பிடுகையில் அதிக நெருக்கடியையும், வாகனப் போக்குவரத்தையும் கொண்ட பாதைகளில் இதுவும் ஒன்ருகும்.

பெருந்தெருக்கள் திணைக்களம் தற்பொழுது ஆரம்ப நடவடிக்கையாக ஏராளமான கற்குவியல்களை இடத்திற்கிடம் குவித்துள்ளது. இதையிட்டு மக்கள் மகிழ்ச்சி தெரிவிக்கும் அதேவேளையில் கற்கள் சிதறுப்பட்டு பாதையின் அரைவாசிப் பகுதியை நிரப்பியிருப்பதனல் தவிர்க்கக்கூடிய விபத்துக்கள் கூட தவிர்க்க முடியாமல் போய்விடுகின்றன. (ஒருபுறம் குன்றும், குழியும், மறுபுறம் கற்குவியல்) எனவே இதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக வேலைகளை ஆரம்பித்து பாதசாரிகளுக்கு ஏற்படுகின்ற வீண் சிரமங்களைத் தவிர்க்க மாட்டார்களா? என மக்கள் கேட்கிறுர்கள்.

## ஜனசக்தி ச. ச. நிலைய நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் அரசடிவீதி ஜனசக்தி சனசமூக நிலையத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் நிர்வாகிகள் தெரிவும் அண்மையில் நடைபெற்றன.

ஜனசக்தி சனசமூக நிலைய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்: போஷகர்கள்- திரு. ச. இராசையா, திருவாளர்கள் சி. சின்னக்கிளி, சி. பத்மநாதன், தலைவர்- திரு. இ. இரவீந்திரராயூ, உப-தலைவர்- திரு. செ. செந்தில்வேல், செயலாளர்- திரு. ந. ஜீவறெட்ணம், உப-செயலாளர் திரு. நெ. ஜெயந்தன், பொருளாளர்- திரு. க. அரசரத்தினம், விளையாட்டுச் செயலாளர்- திரு. செ. ஜீவராசா, ஐவர்கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

மேற்படி நிலையத்தின் மாதர் சங்க நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவி-திருமதி சி. சரஸ்வதி, செயலாளர்- செல்வி கு. மதனுராணி, பொருளாளர்- செல்வி சி. இந்திராகாந்தி.

## இடமாற்றம்

(அராலி)

யாழ். மாவட்ட சபையின் அராலி உப அலுவலகத்தில் பணியாற்றிய திரு. சி. சிவராஜசிங்கம் வவுனியா நகர சபையில் எழுது வினைஞராக பதவி உயர்வுடன் இடமாற்றம் பெற்றுள்ளார். கடந்த வருடம் நடைபெற்ற சிற்றூழியர்களின் பதவி உயர்வுக்கான பரீட்சையில் சித்தியெய்திய ஒரேயொரு யாழ் மாவட்டத்தவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

வியாபாரம்பெருக விளம்பரம் செய்க

ஈழமுரசு

## தெகிவத்தை கண்ணிவெடியில் மூன்று ராணுவத்தினர் பலி!

திருகோணமலை மாவட்டத்திலுள்ள தெஹிவத்த என்ற சிங்கள குடியேற்றத் திட்டக் கிராமத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற கண்ணிவெடித் தாக்குதல் சம்பவத்தில் மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் மேலும் மூன்று இராணுவத்தினர் படுகாயமடைந்தனர். இராணுவத்தினர் ரோந்துநடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோதே இக்கண்ணிவெடித் தாக்குதல் இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது. பொல்லனறுவையிலிருந்து ராணுவத்தினர் திரும்பிச் செல்கையில் இச்சம்பவம் இடம்பெற்றது.

### நான்கு நாட்களாகத் தொடர்ந்து பதற்றம்:

# பருத்தித்துறையில் அலுவலகங்களை இடமாற்ற முயற்சி; வேலைக்குச் செல்ல ஊழியர்கள் அச்சம்

(புலோலி)

பருத்தித்துறையில் தொடர்ந்து நிலவும் பதற்றத்தினால் பொது மக்கள் பெரிதும் பீதியடைந்துள்ளனர். தினமும் குண்டு வெடிச் சத்தங்களும், துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் விட்டுவிட்டு கேட்டுக் கொண்டிருக்கின்றன. கடந்த சனிக்கிழமையிலிருந்து பருத்தித்துறை நகரம் வெறிச்சோடியிருக்கின்றது.

கடந்த புதனகிழமை மாலை பயங்கர குண்டுவெடிச் சத்தங்களும், துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் நகரை அதிர வைத்தன. வியாழக்கிழமை காலை கேட்ட துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களையடுத்து ஒற்றைக் கதவில் திறக்கப்பட்டிருந்த வியாபார ஸ்தாபனங்களும் இழுத்து மூடப்பட்டன.

பருத்தித்துறை நகர சபை அலுவலகம், பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம், பருத்தித்துறை நீதவான் நீதிமன்றம் ஆகியன இராணுவ கூட்டு முகாமிற்கு அருகாமையில் இருப்பதனால் பயத்தின் காரணமாக ஊழியர்கள் செல்லாதபடியினால் அவ் அலுவலகங்களின் நடவடிக்கைகள் யாவும் முற்றாக ஸ்தம்பித்துள்ளன.

பருத்தித்துறை இலங்கை வங்கிக் கிளை, மக்கள் வங்கிக் கிளை, தேசிய சேமிப்பு வங்கி என்பனவும் மூடப்பட்டிருந்தன. நகரின் கடைகள் யாவும் மூடப்பட்டே இருக்கின்றன. நகரப் பகுதியில் வசித்துவந்த மக்கள் அயற் கிராமங்களை நாடி இடம்பெயர்ந்துள்ளனர்.

பருத்தித்துறை மினி பஸ் சேவைகள் சிவன்கோவிலடியிலிருந்தே ஆரம்பமாகின்றன. பருத்தித்துறை மரக்கறி, மீன் சந்தைகள் கூடுவதில்லை தும்பளை வீதி, சிவன்கோவிலடியில் மரக்கறிச் சந்தையும், திக்கமுனை மைதானத்தில் மீன் சந்தையும் கூடுகின்றன. யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபை புலோலி உப-அலுவலகம் கிராமக் கோட்டடியில் புதிதாக ஆரம்பித்துள்ள பொதுசன மரக்கறிச் சந்தை, மீன் சந்தைகளில் பாவனையாளர்கள் பொருட்களை வாங்கிச் செல்வதையும் காணக்கூடியதாக இருக்கின்றது.

வியாழக்கிழமை காலை நடைபெற்ற துப்பாக்கிச்சூட்டில் மோகன் என்ற இளைஞன் வயிற்றில் பலத்த சூட்டுக் காயத்துடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பெற்று வருகின்றார். முதல் நாளான புதன்கிழமை நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த இளைஞனும் பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு தற்போது யாழ் பெரியாஸ்பத்திரியில் சிகிச்சைபெற்று வருகின்றார். அதற்கு முதல்நாள் பருத்தித்துறை வி. எம். றோட்டில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான ஆறு பிள்ளைகளின் தந்தையான வயோதிபரும் யாழ். அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றார்.

### ஜனாதிபதியிடம் ஆட்சேபம்

புதிதாக பிரகடனப்படுத்தப்பட்ட 'பாதுகாப்பு வலய' சட்டத்துக்கு, பிரஜைகள் குழுக்களின் இணைப்புக்குழு, ஜனாதிபதியிடம் கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

### ஸ்ரேடியத்தில் பென்ஷன் இல்லை

யாழ். துரையப்பா விளையாட்டரங்கில நேற்று முன்தினமும் நேற்றும் வழங்கப்பட இருந்த தபால் நிலைய பென்சன பணம கொடுக்கும் வேலைகள் நடைபெறவில்லை யாழ். தபால் நிலைய ஊழியர் கடமைக்கு வராததினாலேயே இந்த பென்சன் வழங்கப்படவில்லை.

அதேவேளை ஓய்வூதியம் பெறுபவர்களும் துரையப்பா விளையாட்டரங்கிற்கு செல்ல அச்சம் தெரிவிக்கின்றனர். இவர்கள் வேறு முறைகளினால் தமது பென்சனைப பெறுவதற்கான வழிமுறைகளை ஆராய்ந்து வருகின்றனர்.

## புளொட் விடுத்துள்ள அறிக்கை

## 15ம்திகதி கடத்தப்பட்ட சீனி இராணுவத்துக்கே வந்தது

இம்மாதம் 15ம் திகதி இடம்பெற்ற சீனிக் கடத்தலுக்கு தாமே பொறுப்பென அறிவித்துள்ள தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம (புளொட்) மேற்படி சீனி காங்கேசன் துறையிலுள்ள இராணுவ முகாமிற்கு கொண்டு செல்லப்பட இருந்ததென்பதை தம்மால் நிரூபிக்க முடியும் எனவும் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக மேற்படி கழகம் விடுத்துள்ள அறிக்கையில, யாழ், அரசாங்க அதிபரினால் தெரிவிக்கப்பட்ட அச்சம் மக்களைக் காட்டி அரசாங்கம் தன் நஷ்டத்தை ஈடுசெய்ய முயன்றிருக்கலாம் என்னும் சந்தேகத்தையே ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு. சிவமகாராசாவின் அறிக்கை இந்நிலையிலும் தன் தேசிய கூட்டுறவுச் சபையின் அங்கத்துவத்தைக் காப்பாற்ற மக்களைப் பாவிக்கிறார் என்ற அச்சத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் இவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மைக் காலமாக யாழ். மாவட்டத்திற்கான உணவு விநியோகம் கப்பலூடாகவே நடைபெறுவதாகவும் 15ம் திகதி காங்கேசன்துறை துறைமுகத்தில் கப்பல் ஒன்று நங்கூரமிட்டிருந்ததாகவும் புளொட் தெரிவித்துள்ளது.

### வடக்கே...

நவீன புதிய, இதுவரை கண்டிராத கவசவாகனங்கள் இடையிடையே இ. போ. ச. பஸ்கள், லொறிகள் தொடர்ந்து வரப் பயணத்தை ஆரம்பித்துள்ளன. இவை மாங்குளம், கிளிநொச்சி, ஆனையிறவு ஆகிய இடங்களில் இரவில் தரித்து நின்று இரண்டொரு தினங்களில் வடபகுதியை வந்துசேரக் கூடும் என்று கூறப்படுகின்றது.

### மாலைரோந்து...

வந்த சீருடையினர், அப்பகுதியில் ரோந்து மேற்கொள்ள முயன்றபோது பலத்த குண்டுவெடிப்புச் சத்தங்கள் கேட்டன இதனையடுத்து அவர்கள் திரும்பிச் சென்றுவிட்டனர்.

### உருத்திரபுரத்தில்...

கள் ஸ்தலத்திலேயே பலியாகினர். ஒருவர் வயலில் உள்ளஒரு கொட்டிலுக்குள் உயிரோடு எரிக்கப்பட்டார் சடலம் அரைகுறையாக எரிந்த நிலையில் காணப்பட்டது. இருவரின்சடலங்கள் இராணுவத்தால் முகாமுக்கு கொண்டுவரப்பட்டுநேற்றுக்காலை கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டது. இதில் ஒரு சடலம் ஜெயந்தி நகரைச் சேர்ந்த இதயரூபன் (22) என்பவரது என்று தெரியவந்துள்ளது.

இப்பகுதியிலுள்ள வீடுகள் யாவும் இராணுவத்தால் சோதனையிடப்பட்டு சுமார் எண்பது பேர் கைது செய்யப்பட்டனர். இவர்களில் சுமார் இருபது பேர் அன்றிரவே விடுதலை செய்யப்பட்டதாக தெரியவந்துள்ளது. இங்கு காணப்பட்ட இரு மோட்டார் சைக்கிள்களும் இரு உழவு இயந்திரங்களும் இராணுவத்தால் முகாமுக்கு கொண்டு வரப்பட்டது. நேற்று முன்தினம இரவு வரை இப்பகுதியில் துப்பாக்கி, குண்டுச் சத்தங்கள் கேட்டவண்ணமே இருந்தன.

இச்சம்பவத்தின்போது வயல்களில் வேலை செய்து கொண்டிருந்த தொழிலாளர்கள் குளறியபடி சிதறியோடினர். மக்கள் பதற்றத்துடன் வீடுகளை விட்டு வெளியேறினர்.

கைதானவர்கள், காணாமல் போனவர்களின் உறவினர்கள் கிளிநொச்சி பிரஜைகள் குழுவுக்கு முறைப்பாடு செய்தனர்.

### குரும்பசிட்டி....

கொண்ட தாக்குதலால் எதிர்தரப்பில் மூவர் மரணமடைந்திருக்கலாம அல்லது மூவர் படுகாயமடைந்திருக்கலாமென்று கூறப்படுகின்றது.

சீருடையினரால் கார் ஒன்று எரிக்கப்பட்டதாகவும், பல மோட்டார்களை எடுத்துச்செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. இச் சம்பவங்களால் நேற்று நண்பகல வரை இப்பகுதிகளில் பெரும் பதற்றம் நிலவியது.

### ரயிலில் வந்த சீனி விநியோகம்

நேற்று முன்தினம் இரண்டு ரயில் வகனிலும், நேற்றுமூன்று ரயில் வகனிலும் யாழ்ப்பாணத்துக்குசீனிகொண்டு வரப்பட்டு, யாழ். புகையிரத நிலையத்தில் வைத்தே பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்களுக்கு விநியோகிக்கப்பட்டது.

### கோட்டைக்குள்....

சுப்பிரின்டன் டாக்டர் நச்சினார்க்கினியர், யாழ். மாவட்ட சுகாதார பிரதிப பணிப்பாளர் டாக்டர் ஜெகநாதன், கல்விப் பணிப்பாளர் திரு. எம். சிவபாமபிள்ளை, வங்கிகளின் மனேஜர்மார், நீதிமன்றங்களின் பதிவாளர்கள், வட பகுதி போக்குவரத்துச் சபைத் தலைவர் திரு. எஸ். கனகரத்தினம், சுங்கப் பகுதி உதவி கலக்டர் திரு. என். கணநாதலிங்கம், யாழ். புகையிரத நிலைய பிரதம அதிபர் திரு. ராஜா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

புதிய சட்டம் பற்றி இங்குள்ள அலுவலகங்கள் பீதியடையத் தேவையில்லையென்றும், ஆனால் தேவையற்ற வெளியார் இவ் அலுவலகங்களில நடமாடுவதை தடுக்க வேண்டுமென்றும் பிரிகேடியர் இங்கு கேட்டுக் கொண்டதாக தெரியவந்துள்ளது.

### 'தன்னிடமிருந்த....

எங்கள் வீட்டுக்குள்ளேயும் சீருடையினர் சென்றபோது, அவர்களுக்குப் பயந்து எனது கணவரும, எனது சகோதரனும் ஒழித்திருந்தார்கள். நாம் மட்டும் பயத்துடன் வெளியே நின்றபோது எவ்வித இம்சையும செய்யாது இராணுவத்தினர் சென்றனர். சுமார் ஒன்று தட்ட ஆறு மணித்தியாலங்களுக்குப் பன்பு திரும்பிவரும போது 'எம்மை ஒன்றும் செய்யமாட்டார்கள்' என்று கூறிய எனது கணவர் வீட்டுக்குள் எமது பிள்ளையைத் தூக்கிவைத்துக கொண்டிருந்தார்.

பின்பக்க வழியால் வந்தவர்கள் எனது கணவனையும், சகோதரனையும் அழைத்தனர். எனது கணவனிடம்,பிள்ளையை மனைவியிடம் கொடுத்துவிட்டு வரும்படி கூறினர். நான் பிள்ளையை வாங்கியபடி அவரை ஒன்றும் செய்யவேண்டாமென்று மன்றாடினேன். என் கண் முன்னாலேயே என் கணவரை மூன்று முறை சுட்டனர். கணவன் சுருண்டு நிலத்தில் வீழ்ந்தார். உடன் என் சகோதரனையும் அழைத்தனர். கொச்சைத் தமிழில் வேறொரு ராணுவம் சுடவேண்டாம் என்று கட்டளையிட்டான். என் சகோதரர் விடப்பட்டார். விழுந்து கிடந்த என் கணவரின் மேல் கவச வாகனத்தை ஏற்றப் பார்த்தனர். நான் என்னையும் சேர்த்து நெரிக்கும்படி கணவனை அணைத்தபடி நின்றேன். பின் அருகால் கவச வாகனத்தைச் செலுத்திச் சென்றனர்'' என்று தெரிவித்தார் அந்த மனைவி.

### அச்சத்துடன்....

துள்ள பகுதி பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டதையடுத்தே மக்கள் மத்தியில பழமையிலும மேலான அச்சம் நிலவியது. பாதுகாப்புப்பகுதியின் வரையறுக்கப்பட்ட எல்லை எதுவென தெரியாததால் மக்கள கூடிய அச்சத்துடன், முகத்தில் கேள்விக்குறியுடன் காணப்பட்டனர். பலவாறான வதந்திகளும் பரவின. நகரில ஆஸபத்திரி வீதியை அண்டிய பகுதியில வாகனங்கள் நிறுத்தப்படுவது குறைந்திருந்தது. கோட்டைப் பகுதி அண்மையிலுள்ள வீதிகளிலும் வாகனங்கள் போக்குவரத்து செய்ய அஞ்சின.

### ஆயிரம்...

நில தொழில், வர்த்தகம், கல்வி எல்லாம் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளன என்று இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்தின சார்பில அதன் வடபிரதேச பிரதிநிதி திரு. எம். சி. ஏ. இக்பால், ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

யாழ். மாவட்டத்தின் முக்கியமான பல அலுவலகங்கள், ஆஸபத்திரி, நீதிமன்றம, பஸ் நிலையம, சந்தை ஆகியவைகளும் கூட இச்சுற்றளவுக்குள் இருப்பதையும அவர் தமதுகடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

கோட்டையிலிருந்து பீரங்கித் தாக்குதல நடத்த அனுமதித்துள்ளது இரண்டாம் உலக மகாயுத்தத்தில யூதர்களை அறையில பூட்டிவைத்து ஹிட்லர் விஷவாயு மூலம் கொலைசெய்ததைப பார்க்கிலும கொடுமையானது எனவும இவர் தமது கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளார்.

எனவே கோட்டை முகாமை இங்கிருந்து மாற்றுமாறும் ஜனாதிபதியிடம் கேட்கப்பட்டுள்ளது.

### யாழ் ஆஸபத்திரி....

களின் நிலைமை, ஆஸ்பத்திரி அமைந்த பகுதி மற்றும் இங்கு தங்கியுள்ள நோயாளர்கள், இரவு கடமையாற்றும் ஊழியர்கள், இங்குள்ள விடுதி ஊழியர்கள் சம்பந்தமாக இவ்வதிகாரி இவர்களுக்கு விபரமாக எடுத்துக் கூறினார்.

இதனையடுத்து இரு திணைக்கள இயக்குனர்களும் தாம் பாதுகாப்பு அமைச்சு, தேசிய சந்தோபஸ்து அமைச்சு அதிகாரிகளுடன் பேசி உடன் நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை நேற்று யாழ். ஆஸ்பத்திரி வெளிநோயாளர் பகுதிக்கு நோயாளிகளும், பொதுமக்களும் அச்சம் காரணமாக குறைவாகக் காணப்பட்டனர். வார்டுகளில் தங்கி சிகிச்சை பெற்று ஓரளவு சுகமடைந்துள்ள நோயாளர்கள் தாம் வீடுகளுக்கு செல்ல அனுமதி கோரியுள்ளதாகவும் தெரியவருகிறது.

''ஈழமுரசு'' சாயிபாபா அட்வர்டைசிங் அசோஸியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 18 - 01 - 86 சனிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 23336